தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST




கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 14 ஜனவரி 2014 கனி 2

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Jan. 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

To

உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்
பிரசங்கி 11:1

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


திருச்சியில் சுவிசேஷக்கூட்டம்

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழ்









**Editor: B.ARJUNAN**

**Associate Editor: S.Reagan**

**Associate Editor: A.Kanagaraj**


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 161

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. பாலாக் எந்த தீர்க்கதரிசியை கூட்டிக்கொண்டு அவனைப் பாகாலுடைய மேடுகளில் ஏறப்பண்ணினான்?
2. சத்தியத்தின்படி நேசித்திருக்கிறவளும், தெரிந்து கொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கு எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி: அவைகளைத் தெழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்தும் மிகவும் எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லும் தாசன் யார்?
4. சத்தியத்தின்படி நேசிக்கிற காயுவுக்கு எழுதின அப்போஸ்தலன் யார்?
5. கர்த்தர் மோசேயை எந்த பர்வதத்தில் ஏறி, நான் இஸ்ரவேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்தைப் பார் என்றார்?
6. நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களை என்ன செய்து கொண்டு சிட்சிக்கிறேன் என்கிறார்?
7. ஆயி பட்டணத்தை சுட்டெரித்துப்போட்டு பாழாய்க்கிடக்கும் மண்மேடாக்கினவன் யார்?
8. இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள் அப்பொழுது வந்த பொய்ச்சாட்சிகள் எத்தனைபேர்?
9. யோசுவா எங்கு அடக்கம் செய்யப்பட்டான்?
10. எந்த மனுஷனும் எதினால் உப்பிடப்படுவான்?

## பெதஸ்தா குளம் The Pool of Bethesda

- எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமின் ஆட்டுவாசலினருகே இருந்தது - யோவா.5:2
- இக் குளத்தின் சிறப்பு: தேவதூதன் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான் தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி இறங்குவானோ அவன் எப்பேர்பட்ட வியாதியஸ் தனாயிருந்தாலும் சொஸ்தமாவான் - யோவா.5:4
- இக் குளத்தண்டை படுத்திருந்த 38 வருஷம் வியாதிகொண்ட மனுஷனை இயேசு உன் பாடுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி நடந்தான் - யோவா.5:5-8
- இக்குளம் இரட்டைக்குளம் போன்றதாக இருந்ததென 1914-ல் கண்டுபிடிக்கப்பட்டது.
- இக்குளத்திற்கு ஐந்து மண்டபங்கள் - யோவா.5:2



சிறுவர் பகுதி

# காதுள்ளவன் கேட்கக்கடவன்

வேத பகுதி: வெளி.3:6

ADS.Sugumar



அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். அதே சமயத்தில் ஜனவரி முதல் தேதியில் மட்டும் விசேஷித்த ஜெபங்களை நாம் ஏறெடுப்போமானால் டிசம்பர் 31-ம் தேதிவரை நாம் விசேஷமாக ஜெபிக்கவில்லை என்று பொருள் படுகிறதே அதை எப்போதாவது நீங்கள் யோசித்ததுண்டா?

எனவே தேவனுடைய அன்பினாலும் கிறிஸ்துவின் கிருபையினாலும் ஜீவித்துக்கொண்டிருக்கிற நமக்கு ஒவ்வொரு காலைப்பொழுதும் பூத்துக்குலுங்கும் புதிய வருடங்கள்தான். நாட்களை விசேஷித்துக்கொள்பவர்களைப் பற்றி நமக்குப் பிரச்சனையில்லை. நமக்கு எல்லா நாட்களும் தேவனுடைய தயவால் கிடைக்கப்பெற்ற நாட்கள்தான்.

சரி அது இருக்கட்டும் நம்ம மேட்டருக்கு வருவோம். அதென்ன தலைப்பில் "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று வேதம் வலியுறுத்துகிறது அப்படியானால் செவிடர்களுக்கு காது என்ற உருப்பே கிடையாதா? அல்லது செவிடரின் காதுகளையெல்லாம் பேதுருவைப்போல அறுத்து எடுத்துவிடலாமா? அப்படியல்ல அன்பரே, காது என்ற உறுப்பை தேவன் நமக்கு எதற்கு கொடுத்திருக்கிறார் என்று உணராத ஜென்மங்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்தத்தான், பரிசுத்த ஆவியானவர் இந்த வசனத்தை வெளிப்படுத்துகிறார்.

ஒரு பள்ளிக் கூடத்தின் நிர்வாகத்தினர் அதனுடைய ஆண்டுவிழாவிற்கு ஒரு மந்திரியை அழைத்தால் கௌரமாக இருக்கும் என்று ஒரு அமைச்சரிடம் தேதி கேட்டு பெற்றுக் கொண்டார்கள். அப்போது அமைச்சர் தன் பந்தாவை காட்டுவதற்காக அவர்களிடம் எனக்கு அதிகமான நிகழ்ச்சிகள் இருப்பதால் என் நேரத்தை வீணாக்காதீர்கள் நான் ரெம்ப பிசி என்று சொல்லி அனுப்பினார்.

அந்த நாளும் வந்தது அமைச்சர் வந்து அவசரமாக மேடை ஏறினார் அப்போது அவரிடம் பள்ளி நிர்வாகி ஒரு முக்கிய விஷயம் சொல்ல அவர் அருகில் நெருங்கினார் ஆனால் அதற்குள் அமைச்சர் சட்டென்று மைக்கை எடுத்துக்கொண்டு பேச ஆரம்பித்து விட்டார். உண்மையிலேயே கல்வியைப் பற்றி மிக நன்றாக ஒன்றை மணிநேரம் பேசி முடித்தார். யாருமே கைதட்ட வில்லை, பாராட்டும் தெரிவிக்கவில்லை. அமைச்சருக்கு கோபம் பள்ளி நிர்வாகியை அழைத்து என்ன இவ்வளவு நேரம் அருமையாக பேசினேன் யாருமே கைத்தட்ட வில்லையே என்று கடுப்புடன் கேட்டார். நிர்வாகி சொன்னார்: ஐயா, இது செவிடர்பள்ளி அவர்களுக்கு காதுகேட்கும் கருவியை நாங்கள் வாங்கிவைத்திருக்கிறோம் அதை அவர்களுக்கு உங்கள் திருக்கரங்களால் வழங்கிவிட்டு அதன் பிறகு உங்களை பேசவைக்க இருந்தோம் அதற்குள் நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள். இங்கு மாணவர்களுக்கும் காதுகேட்காது ஆசிரியர்களுக்கும் காது கேட்காது என்றார். அமைச்சரின் முகத்தில் ஈயாட வில்லை. அசடு வழிந்து நின்றார். இப்படித்தான் வேத வசனத்தை கேட்பது போல் நடிப்பவர்களும், கேட்டும் அதன்படி நடவாமல் போகிறவர்களும், தன் வசதிக்கு ஏற்றார்போல போதிப்பவர்களும் காது இருந்தும் என்ன பயன்? அதே சமயம் அமைச்சரின் பேச்சை கேட்க ஆவலாய் இருந்தவர்கள் மத்தியில் தன் தற்பெருமையினால் கொடுத்த செய்தி அவர்களுக்குப் போய்ச்சேராமல் போனது. அதுபோல சில ஊழியர்கள் ஆவலாய் கேட்க காத்திருக்கும் விசுவாசிகளுக்கு வசனத்தின்படி போதிக்காமல் சொந்தக்கதை, சோகக்கதைகளினால் காலத்தை வீணாக்குகிறார்கள். ஊழியர்கள் இனிமேலாவது கூட்டத்தின் சூழ்நிலை அறிந்து நல்ல நிலத்தில் வசனத்தை விதைக்க முற்படுவார்களா!

"வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" நீதிமொழிகள்.28:9



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 ஜனவரி-2014 கனி - 2

ஆசிரியருரை

# கிறிஸ்துவுக்குள் சுதந்தரம்
## Inheritance In Christ



சுதந்தரம் மனுஷனுக்கு கிடைக்கும்போது அவன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகின்றான். நாமும் கூட சுதந்திர நாட்டில் இருக்கிறோம். சுதந்திரமாக எங்கும் கடந்துசெல்கிறோம். நமக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சுதந்திரத்தின் வாயிலாக அனுபவிக்கிறோம். அதைப்போல பாவத்திலிருந்து நமக்கு விடுதலை வேண்டும். அப்பொழுதே மெய்யான ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வோம். இதை கொடுக்க வல்லவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மட்டுமே. அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பவுல் எழுதும்போது; ''தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்'' என்கிறார் (எபே.1:12).

ஒருவர் உயர்வான பதவிக்கு தெரிந்துகொள்ளப்படுகிறார் என்றால் அவருக்கு எத்தனை சந்தோஷ இருக்கும். அதைப்போல அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டார்கள். நீங்களும் நானும்கூட கிறிஸ்துஇயேசுவுக்குள் தெரிந்துகொள்ளப்படவேண்டும். அழைக்கப்பட்டவர்கள் அநேகர் ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என வேதத்தில் வாசிக்கிறோம். அந்த சிலரில் ஒருவராக நீங்கள் இருக்கவேண்டும். மேலும் பவுல் கொலோசெயர் சபைக்கு எழுதும்போது; ''ஒளியிலுள்ள பரிசுத்தவான் களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது'' (கொலோ.1:12-14). இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை பிதாவாகிய தேவன் மீட்டு தமது குமாரனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்திருக்கிறார். இதுவே மெய்யான சுதந்தரமாக இருக்கிறது. இருளின் அதிகாரம் என்பது பாவத்தின் அதிகாரத்தை அதாவது பிசாசின் ஆதிக்கத்தை குறிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த மரணஇருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டோம். ஆகையால் ''கர்த்தருக்குள்

அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்'' (1கொ.7:22). சுயாதீனனாய் அழைக்கப்பட்ட நீங்கள் மனுஷர்களுக்கு அடிமைகளாகாதிருங்கள். கர்த்தர் ஒருவருக்கே அடிமைகாளாயிருங்கள். அவர் உங்களை ஆள இடம்கொடுங்கள். பாவம் ஒருக்காலும் உங்களை ஆள இடம்கொடாதிருங்கள்.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார். இந்த பரிசுத்த ஆவியானவரைப்பற்றி அநேகர் பேசக்கேள்விப்பட்டிருப்பீர்கள். பலர் பலவிதமாக பரிசுத்த ஆவியானவரைப் பற்றி சொல்லிவருகிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் அவரைப் பற்றி என்ன சொல்கிறது என்று பார்க்கலாம். ''நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்'' (எபே.1:13,14). என்றைக்கு நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்கிறோமே அன்றே பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்படுகிறோம். ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும்போது எல்லாவிதமான டெஸ்டும் முடிந்துவிட்டால் தகுதியான நபர் மார்பில் ஒரு முத்திரையிடுவார்கள். அது எதைக்குறிக்கிறது என்றால் இவர் இராணுவத்திற்கு தேர்ச்சிபெற்றவர் என்பதை குறிக்கும். அதைப்போல கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகிறோம். மேலும், கர்த்தருடைய ஜனங்கள் மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் அச்சாரமாயிருக்கிறார் என காண்கிறோம். ''ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்?'' என்று கலா.4:7-ல் வாசிக்கிறோம். பாவத்திற்கு அடிமைகளாக இருந்த நம்மை கர்த்தர் மீட்டு தம்முடைய புத்திரர்களாக மாற்றியிருக்கிறார். இது தேவனுடைய ஈவாக இருக்கிறது. நாம் தேவனுடைய புத்திரர்களாக இருப்போமானால் கிறிஸ்துமூலமாய் சுதந்தரர்களாகவும் இருக்கிறோம். இந்த சுதந்ததிரத்தை ஆண்டவர் இயேசுவின் மூலம் பெற்று இருக்கிறோம். ஆனபடியால், ''ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளா யிருக்கிறோம்'' (கலா.4;28). தேவன் ஆபிரகாமுக்கு வாக்கு பண்ணியபடி ஈசாக்கை கொடுத்தார். மேலும், கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணும்போது வானத்து நட்சத்திரங்களைப்போல உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்றார். அந்த சந்ததி கிறிஸ்துவைக்குறிக்கும். கிறிஸ்துவுக்குள் இருக்கிற நாம் அந்த சந்ததிகளாகவும், சுதந்தரவாளிகளாகவும், தேவனுடைய புத்திரர்களாகவும் எண்ணப்படுகிறோம். இந்த மெய்யான சுதந்தரத்தை காத்துக்கொள்ளுங்கள். பாவத்திலிருந்து விடுதலையில்லாமல் அநேகர் அவதிப்படுகின்றனர், ஆனால் அவர்களை மீட்கவந்த ஆண்டவர் இயேசுவை அவர்கள் கண்டுகொள்ளாமலி



கேட்கக்கடவன் அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என்றும் மத்.7:8-11-ல் "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றும் 11ஆம் வசனத்தில் பரலோகத்தின் பிதாவிடம் வேண்டிக்கொள்ளுகிறவனுக்கு நன்மையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயமல்லவா, அப்படியென்றால் தேவனிடத்தில் கேட்டவுடனே பெற்றுக்கொள்கிற தகுதியை நாம் பெற்றிருப்பதினால் நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள் என்பதை பாருங்கள். பிரியமானவர்களே, நாம் நம்முடைய நண்பரிடத்திலோ அல்லது தெரிந்தவர்களிடத்திலோ ஏதாகிலும் உதவியை கேட்கும்போது அவர்கள் கொடுக்கலாமா, வேண்டாமா, என்று யோசிக்கும் இக்காலத்தில் நாம் தேவனிடத்தில் விசுவாசமாய் கேட்டவுடனே சம்பூரணமாய் கொடுக்க வல்லவராய் இருக்கிறார். இவ்வளவு மேன்மையை பெற்ற நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள். ஆனால் நாம் உலக கவலை, பொருள் ஆசை, இச்சை இவைகளால் சிக்குண்டு தேவனுடைய பார்வையில் விசேஷித்தவர்கள் என்ற ஆசீர்வாதத்தை இழந்துவிடுகிறோம்.

**ஆறாவதாக** யோவா.14:1-ல்"தேவனிடத்திலும் என்னிடத்திலும் விசுவாசமாய் இருங்கள்" என்று வாசிக்கிறோம். நாம் ஏன் விசுவாசமாய் இருப்பதில்லை? இருந்தால் நாம் விசேஷித்த அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும். வேதாகமத்தில் தானியேல் என்கிற தீர்க்கதரிசியை பார்க்கிறோம். அவர் தேவனுடைய தாசனாகவும், விசுவாசமுள்ளவனாகவும் வாழ்ந்தார். தானி.1:3-16 வரை வாசித்து பார்க்கும்போது; அரமனை வேலைக்காக ராஜா இஸ்ரவேலில் அநேக வாலிபர்களில் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகு, ஞானம், அறிவு, கல்வி இவற்றில் சிறந்த சில திறமைமிக்க வாலிபர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு கல்தேயரின் பாஷையை எழுதவும், பேசவும் கற்றுக்கொள்ளும்படி கட்டளையிட்டு அவர்களுக்கு தான் உண்ணும் போஜனத்திலும், தான் குடிக்கும் திராட்ச ரசத்திலும் ஒருபங்கு இவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். இதை மீறினால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். ஆனால் தானியேலோ இராஜ போஜனத்தினால் தன்னை தீட்டுப்படுத்தலாகாது என்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்கு பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும், இரக்கமும் கிடைக்கச் செய்தார். தானி.1:11-16-ல் பிரதானிகளின் தலைவன் இவர்களை 10 நாள் சோதித்துப் பார்த்தபோது மற்ற எல்லா வாலிபர்களின் முகங்களைக் காட்டிலும் இராஜ போஜனத்தையும், அவர்கள் குடிக்க கட்டளையான திராட்ச ரசத்தையும் நீக்கி வைத்த இவர்களுடைய (தானியேல், சாத்ராக்,மேஷாக், ஆபேத்நேகோ) முகங்கள் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாகவும் காணப்பட்டதாக நாம் வேதாகமத்தில் வாசிக்கின்றோம்.

பிரியமானவர்களே, இவர்கள் தேவன் மீது கொண்ட விசுவாசத்தின் பலனால் விசேஷித்தவர்களாய் இருந்தார்கள். நாமும் கூட தேவனுடைய சத்திய வசனத்தின் வழியில் வாழ்ந்து உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளை காட்டிலும் தேவனிடத்தில் விசுவாசமாய் இருந்தால் நாம் விசேஷித்தவர்களாய் இருப்போம். கடைசியாக மத்.10:31-ன் படி "நாம் எல்லாவற்றைப் பார்க்கிலும் நாம் விசேஷித்தவர்கள் தான். இப்புதிய ஆண்டில் கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் விசேஷித்தவர்களாய் ஜீவிப்போம். ஆமென்



# நாம் விசேஷித்தவர்கள்

## WE ARE SPECIAL

S.I.Reagan
Associate Editor

நாம் யாராக இருக்க வேண்டும்? கிறிஸ்துவுக்குள் வசனத்தின்படி நாம் நிலைத்திருந்தால் விசேஷித்தவர்களாய் இருப்போம். இன்று அநேக கிறிஸ்தவர்கள் தங்களை விசேஷித்தவர்கள் என்று நினைக்கிறதில்லை. காரணம் அவர்கள் வேத வசனத்தின்படியும் கிறிஸ்துவின் கட்டளையின்படியும் ஜீவிப்பதில்லை. காரணம் மத்.6:27-ல் வாசிக்கும்போது; கவலையினால் என்று வாசிக்கிறோம். நாம் தேவனுக்கு விசேஷித்தவர்கள் என்கின்ற அந்தஸ்தை மறந்துவிடுகிறோம். உலக கவலை, ஐஸ்வரியத்தின் கவலை, சரீர ஆசைகள். இவைகள் நம்மை நாள்தோறும் நெருக்கிக்கொண்டிருக்கிறது. கவலை என்கின்ற வார்த்தை நமது பரிசுத்த வாழ்க்கையையும், நாம் தேவனுடைய பார்வையில் விசேஷித்தவர்கள் என்கிற அந்தஸ்தையும் விட்டு விலக செய்கிறது. ஏனென்றால் மத்.6:26-ல் வாசிக்கும்போது ஒரு காரணத்தை இயேசுவானவர் மிகவும் அழுத்தமாக சொல்கிறார்; "அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் (நாம்) விசேஷித்தவர்கள் அல்லவா! ஆம் நிச்சயமாகவே நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் விசேஷித்தவர்கள் தான். அதில் ஒரு சிறு ஐயம் கூட நமக்கு வேண்டாம். தேவன் நம்மை விசேஷித்தவர்களாகவே படைத்தும் இருக்கிறார். பார்த்துக்கொண்டும் இருக்கிறார், வழிநடத்திக்கொண்டுமிருக்கிறார்.

உலக மக்களைப் பார்க்கிலும், உலக ஐஸ்வரியத்தைப் பார்க்கிலும், ஆகாயத்துப் பறவைகளை பார்க்கிலும், தேவனால் படைக்கப்பட்ட நாம் விசேஷித்தவர்கள். எப்படி என்பதை வேத வசனங்கள் கொண்டு நாம் பார்ப்போம்.

**முதலாவதாக** ஆதி.1:26,27 தேவன்: "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார்" இவ்விதமாய் நாம் தேவனுடைய சாயலாகவும் அவருடைய ரூபமாகவும் படைக்கப்பட்டபடியால் நிச்சயமாகவே நாம் விசேஷித்தவர்கள்!

**இரண்டாவதாக** ஆதி.1:28 "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி அதை கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள்" என்று நம்மை ஆசீர்வதித்ததினால் நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள்!

**மூன்றாவதாக** யோவான் 3:16 பிதா தன் சொந்த குமாரனையே நமக்காகவும் நம்முடைய பாவங்களுக்காகவும் மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு வைத்ததினால் நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள்!

**நான்காவதாக** 1பேது.2:9 நாம் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி என்றும், இராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் (Special people) அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கின்றோம். இந்த உலகத்தில் உள்ள தேவனை அறியாத மக்கள் நம்மை இழிவாகவும், கேவலமாகவும், ஒதுக்கப்பட்டவர்களாகவும் பார்க்கும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினால் நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள்!

**ஐந்தாவதாக** யாக்.1:5 சம்பூரணமாய்க் கொடுக்கும் தேவனிடத்தில்



ருக்கின்றனர். ஏற்றுக்கொள்ளுகிற ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிற சுதந்திரத்தை அனுபவித்துக்கொண்டு கர்த்தரை துதிக்கின்றனர்.

கிறிஸ்துவுக்குள் கிடைக்கப்பெற்ற இந்த சுதந்தரத்தைக்குறித்து மேலும் பவுல் எழுதும்போது; "தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்" என்கிறார் (எபே.1:18,19). ஏனெனில் இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் சிலருடைய கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகையால் பவுல் இவ்விதமாக எழுதுகிறார். அநேகர் இந்த சுதந்தரத்தை அறியாதவர்களாகவும். கர்த்தர் எங்களுக்கு என்ன செய்தார் என்று சொல்லுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தர் நமக்குச் செய்த காரியங்களை எண்ணிப்பார்க்கும்படி நமக்கு அவர் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டும். ஒரு அடிமை விடுதலையாகும் போது அவனுக்கு எத்தனை மகிழ்ச்சியுண்டாகும். அதைப்போல பன்மடங்கு மகிழ்ச்சியை கர்த்தர் நமக்கு உண்டு பண்ணியிருக்கிறார். ஆகையால் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள். மூப்பர்களுக்கு பேதுரு ஆலோசனை சொல்லும்போது "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போத மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்கிறார் (1பேது.5:3,4). சபையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்து மூப்பர்கள் அந்த சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டுவிடக்கூடாது என்பதற்கு மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யுங்கள் என்று எழுதுகிறார். இன்று உள்ள சபை மூப்பர்கள் இவ்விதமாக மந்தையை வழிநடத்துகிறார்களா? அப்படி வழிநடத்தும்போது பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது அவரிடம் வாடாத கிரீடத்தை அந்த மூப்பர்கள் பெற்றுக்கொள்வார்கள். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் ஏழு சபைகளுக்குச் சொல்லும்போது அதில் குறிப்பாக சிமிர்னா சபைக்கு சொல்லும்போது "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்கிறார்" வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அப்படியே செய்வார். ஆகையால் நாம் சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டுவிடாதபடி எச்சரிக்கையாயிருப்போம். மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்வோம்.

மேலும், பவுல் எழுதும்போது; "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களை

தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்" என்கிறார் (2கொரி.6:3). உக்கிராண உத்தியோகம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உக்கிராண விசாரிப்பை மிகுந்த ஜாக்கிரதையுடன் கையாளவேண்டும். குற்றப்படுத்தும் ஜனங்கள் மிகுந்து காணப்படுகிறார்கள். பிசாசு எப்படி, எவனை விழுங்கலாமென்று என்று வகைதேடி சுற்றித்திரிகிறானோ அதைப்போல எந்த விஷயத்தில் இவனை குற்றப்படுத்தலாம் என சிலர் கண்காணித்து வருகிறார்கள். ஆகையால் பவுல் எழுதும்போது; நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் எவ்விதத்தினாலேயும் எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம் என்று சொல்லுகிறார். ஆகையால் தான் வேதம் சொல்கிறது ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும் நிலைத்திருக்கக்கடவன். இதை மாற்றி செய்யும்போது. அந்த ஊழியம் குற்றப்படுத்தப்படும். தேவன் அவனவனுக்கு கொடுத்த வேலையில் நிலைத்திருந்து கர்த்தருடைய ராஜ்யம் பரம்பி மகிமைப்பட பாடுபடவேண்டும். உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த சுதந்தரத்தை சரியானபடி பயன்படுத்துங்கள். இந்த சுதந்தரத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

**பரலோகத்தில் நிலையான ஒரு சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறதா?**

ஆம், கிறிஸ்துவுக்குள் சுதந்தரத்தை பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் பரலோகத்தில் நிலையான சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சுதந்தரத்தைக்குறித்து பேதுரு சொல்லும்போது; "கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் (1பேது.1:5). இந்த சுதந்தரத்தை கர்த்தர் அந்நாளிலே நமக்குத் தந்தருளுவார். இந்த சுதந்தரம் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். பாதிவழியில் பக்தியற்று போகிறவர்கள் பாதாளத்தை தான் பெற்றுக்கொள்ளமுடியும் பரலோகத்தையல்லா. அநேகர் ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் விசுவாசத்திற்கு சோதனை வந்தவுடன் சோர்ந்துபோய், விசுவாசத்தை மறுதலித்தும், அதைவிட்டுவிட்டும் போய்விடுகிறார்கள். சிலர் உலக கவலைகளினால் நெருக்கப்பட்டு வளர்ச்சியடைய முடியாமல் பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். நாம் நம்முடைய சுயபெலத்தினால் நிலைநிற்க முடியாது என்பதுவே உண்மை. தேவனுடைய பெலத்தோடு நிற்கவேண்டும். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சொல்லப்பட்ட வசனத்தை இங்கே நினைவு கூர்ந்துபாருங்கள். பேதுரு எழுதும்போது; தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். நீங்கள் கர்த்தருடைய மந்தையின் ஆடுகளாக இருந்தீர்களானால் என்றால் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவீர்கள். இவ்வுலகத்திலே பாவத்தின் அடிமைதனத்திலிருந்து உங்களை விடுவித்து, உங்களுக்கு சுதந்தரத்தை கொடுத்த கர்த்தர் பரலோகத்தில் வைத்திருக்கிற சுதந்தரத்தையும் கொடுப்பாராக!



3. சந்தேகத்திற்கு இடமின்றி அனைவரின் மனதிலும் இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களை விசுவாசத்திற்குள்ளே நடத்தியது அல்லது அவிசுவாசத்தில் கடினப்பட வைத்தது.

**(தீர்வு) முடிவுரை:**

1. இந்தப் பாடங்கள் உங்களில் எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

2. கிறிஸ்து வருமுன்பு மக்கள் துயரத்திலும், உதவியின்மையிலும் சிக்கியிருந்தார்கள். கிறிஸ்துவுக்குப்பின் விசுவாசம், மகிழ்ச்சி, நம்பிக்கை இருந்தது.

3. நாம் உதவ நாதியற்ற நிலையில் பாவத்தில் தொலைந்துபோயிருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் மூலம் நாம் பாவ மன்னிப்பைப் பெறலாம்.

4. 11:26-ல் கிறிஸ்து ஒரு முக்கியமான கேள்வியை நம்மிடம் கேட்கிறார். கிறிஸ்து ஏதோ தெளிவற்ற எதிர்கால மரணத்தின் மீது மட்டும் வெற்றியுள்ளவரல்ல. அவர் இப்பொழுதே வெற்றியுள்ளவர் மரணத்தின் மீது.

## நடப்புச் செய்திகள்

- உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.4.17 கோடியில் புதிய கட்டிடம்.
- தெற்கு சூடானில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறுகிறார்கள். உள்நாட்டுப்போர் மூளும் அபாயம்.
- சிறுபான்மையினப்பிரதி நிதிகளுடன் ராகுல்காந்தி ஆலோசனை.
- மூவாயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமான தொலைவில் உள்ள இலக்கினை தாக்கி அழிக்கும் அணுஆயுத வல்லமை கொண்ட அக்னி 3 ஏவுகனை சோதனையை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.
- பால்கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு 221/2 லட்சம் பேர் பயன் பெறுவர். பால் விலையில் மாற்றம் இல்லை.

**வேத அறிவுப்போட்டி: 160 -ன் விடைகள்**

1. கர்த்தர் - சகரி.8:17
2. இ1யேசு - எபி.4:14
3. மல்கியா - மல்.1:9
4. யாக்கோபு - யாக்.1:19
5. நோவாவையும், அவன் குமாரரையும் - ஆதி.9:1
6. பேதுரு - 1பேது.1:2
7. பெசலெயேலும், அகோலியாவும் - யாத்.36:1
8. பேதுரு - 2பேது.1:14
9. கொலைசெய்யப்படவேண்டும் - லேவி.24:16
10. நியாயப்பிரமாணத்தை - 1யோவா.3:4

**வேத அறிவுப்போட்டி:**
**160-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | Sis. கிரேஸ் பக்தர் | - சென்னை |
| 2. | Mrs. ருக்மணி ஜெயசீலன் | - தேனி |
| 3. | Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 4. | A. ரெபேக்காள் | - மதுரை |
| 5. | E. கார்த்திக் ராஜா | |
| 6. | Mr. வீரராகவன் | - கரூர் |
| 7. | S. சசிகுமார் | - சென்னை |
| 8. | Ira. எதிராசன் | - சங்கரி |
| 9. | G. அந்தோனிதாஸ் | - பரமக்குடி |
| 10. | S.R. பெரியசாமி | - சேலூர் |
| 11. | R. ஸ்டெல்லா இளமதி | - தாராபுரம் |
| 12. | T. ராஜாத்தி | - கோம்பை |
| 13. | Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 14. | K. விமலா | - க.பாளையம் |
| 15. | S. லதா | - தேனி |
| 16. | S. ஜெயராஜ் | - பொள்ளாச்சி |
| 17. | Sis. பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 18. | S.A. சாமுவேல் | - நாமக்கல் |
| 19. | K. தங்கவேல் | - பாண்டிச்சேரி |

2. அநேக எண்ணிக்கையுள்ள சாட்சிகளுக்கு முன்பாக இது செய்யப்பட்டது.

**இ) வேதவாக்கியங்களின் மௌனம் இதன் உண்மைத் தன்மையை உறுதியாய் குறிப்பிடுகிறது.**

1. இந்த சம்பவங்களைப் பற்றியெல்லாம் ஒரு மனிதன் தன்னிச்சையாய் எழுதியிருந்தால், மறுவாழ்வைப் பற்றி என்ன மாதிரியான எதிர்பார்ப்பு யூகங்கள் ஏற்பட்டிருக்கும்.

2கல்லறையைத் தாண்டி லாசருவுக்கு எந்த ஒரு அநுபவமும் ஏற்பட்டதாக பதிவு செய்யப்படவில்லை.

**V) அற்புதத்தின் தாக்கம் மரித்தோருக்குரிய துணிகளாலே மூடப்பட்ட நிலையில் லாசரு கல்லறையிலிருந்து வெளியே வந்தபோது பார்த்த மக்களின் மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?**

**அது அவ நம்பிக்கையுள்ள யூதர்களை நிராகரித்தது. சிலருக்கு அவர் அழிக்கப்பட சற்று அதிகம் போட்டியிட்டால் கூடும் என்று நினைத்தார்கள்.**

1. பரிசேயர்களுடன் சேர்ந்து கொண்டு சிலர் புறம் பேசினார்கள் (1:46).

2. சனகரிப் சங்கம் கூடி அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தது (11:53,57). அற்புதம் உண்மையா இல்லையா என்ற சிந்தை கூட இல்லை. இயேசு தன்னை இன்னார் என்று சொல்லுகிறாரே (தேவகுமாரன்) அது உண்மையா இல்லையா என்ற கரிசனை இல்லை. அவர்களுடைய கவலையெல்லாம் தங்கள் வேலை மற்றும் வசதியுள்ள அந்தஸ்தைப் பற்றியேயிருந்தது.

3.மரித்தோரிலிருந்து ஒருவன் சென்று சொன்னாலும் அவர்கள் நம்பமாட்டார்கள் என்ற சொல் அதிக நாட்களாக இல்லை லூக்கா16:31

4. 2கொரிந்தியர் 4:4

என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனக்கண்களைக் குருடாக்கினான்.

5.இன்றைய மக்கள் இன்னமும் அற்புதங்களின் தொகைகளை நிராகரிக்கின்றனர். இந்த குறிப்புகளை இன்றைய மக்கள் விமர்ச்சிக்கின்றனர். ஆனால் அந்த மக்கள் ஒரு அற்புதம் நிகழ்ந்தது என்பதை மறுக்கவில்லை (11:47).

6. அப்போஸ்தலர்களால் பிற்காலங்களில் நடத்தப்பட்ட அற்புதங்கள் மிகவும் எளிதானவைகள்.

**VI) அப்போஸ்தலர் 4:16-ல் "இந்த மனிதரை நாம் என்ன செய்யலாம் எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது" சிலருக்கு இது அவர்களை ஏற்றுக்கொள்ளவைக்கும் ஒரு சக்தி.**

1. சீடர்கள் தங்கள் விசுவாசத்தை பெலப்படுத்திக்கொண்டார்கள்

2.அநேக யூதர்கள் (அவர்கள்) இயேசுவில் விசுவாசம் வைக்கும்படி நடத்தியது.



## வாசகர் கடிதம்...

*23.12.2013*

*அன்புள்ளம் கொண்ட சகோதரர் அவர்களுக்கு,*

*ஸ்தோத்திரம். தங்கள் மாத இதழ் ஒவ்வொரு மாதமும் புது பொலிவுடன், எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் உள்ளன. மிக்க நன்றி. புதிதாக ஊழியத்தில் வந்துள்ள இணை ஆசிரியர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.*

*தங்கள் தேவபணி நன்றாக நடைபெற நாங்கள் ஜெபிக்கிறோம். பாண்டிச்சேரி ECR ரோட்டில் Church of Christ ஊழியங்கள் வளர, தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.*

*தேவ பணியில்*
*அன்பு சகோதரன்*
*K.தங்கவேல்*

**வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது – சங்கீதம் 65:11**

## ஆசிரியர் கடிதம்...

வாசகர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு வருடத்திலும் கர்த்தர் புதுமையான காரியங்களை உங்கள் வாழ்க்கையில் செய்துகொண்டு வருகிறார். கர்த்தருக்குக் காத்திருந்து கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.




"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை உங்கள் இருதயம் கலங்காமலும் பயப் படாமலும் இருப்பதாக" - யோவா.14:27


அப்போஸ்தலர்களுக்கு இயேசுவானவர் விட்டுச்சென்ற ஒரு பெரிய சொத்து எதுவென்றால் அது சமாதானம் இந்த சமாதானத்தை பற்றிக்கொண்டவர்கள். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்கள் சமாதானத்தோடு வாழ்ந்து தேவன் ஏற்படுத்தியுள்ள நித்திய வாழ்வை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். இவ்வருடத்திலே நீங்களும் சமாதானத்தை நாடுங்கள், அதற்கேற்ற காரியங்களை குறித்து பேசுங்கள் அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**அன்புடன்,**
**ஆசிரியர்**

## *எல்லோரும் யூதாஸ்களல்ல*

## Not all are Judases

J.C.Choate




அவ்வப்பொழுது தங்கள் பகுதி சபையிலுள்ள அனைத்து பிரச்சனைகளையும் என்னிடம் கூறுகின்ற சில தனிப்பட்ட நபரிடமிருந்து நான் ஒரு கடிதத்தைப் பெறுகின்றேன். அவர் வெளிநாட்டு உதவியையும் பணத்தையுமே சார்ந்திருக்கின்ற பிரசங்கிகளைப் பற்றி குறிப்பிடுகின்றார். அவர்கள் ஞானஸ்நானத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து பிரகாசமான அறிக்கையை அனுப்புகின்றார் என அவர் கூறுகிறார். இதைப்போல் வேறு சில பிரச்சனைகளையும் தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கிறார்.


ஒரு குறிப்பிட்ட தனி நபர் அந்தக்காரியங்கள் மிக மோசமானவைகள் என்றும் தான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக இருந்ததற்கு வெட்கப்பட்டதாகவும் எழுதினார். அவர் தன்னுடைய பகுதியில் சபை கெட்டபெயரைக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறார்.

இது துயரமான சம்பவமில்லையா? இதைப்பற்றிய ஒவ்வொரு வார்த்தையும் மிக உண்மையாக இருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு அறிக்கையின் பொருள் என்ன? இது கர்த்தருடைய சபையின் அங்கத்தினர் என உரிமைப்பாராட்டுகின்ற சில மோசமான மக்கள் உண்டென்பதையே காட்டுகிறது. இது சபையை குற்றப்படுத்துகிறதா? இல்லை,வேஷந்தரித்த அவர்கள் குற்றவாளிகள், அவர்கள் தங்கள் இருதயத்திலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதே இதன் பொருளாகும்.

நான் இந்தப் பிரச்சனைகளைப் பற்றி எழுதின இந்த குறிப்பிட்ட தனிநபருக்கு சொல்லவிரும்புவது என்னவென்றால் இயேசுவும் தன்னுடைய அப்போஸ்தலர்கள் மத்தியில் யூதாசை பெற்றிருந்தார்! என்பதேயாகும். அது கிறிஸ்துவை குற்றவாளியாக்கவில்லை, அல்லது அவர் ஒரு வேஷந்தரித்தவர் எனப் பொருள்படுத்தவில்லை, மேலும் மற்ற அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தவில்லை. மாறாக, இது கபடமாக நடித்த யூதாசை மட்டுமே குற்றப்படுத்துகிறது. ஒருவருடைய தவறான-செயலுக்காக எல்லோரையும் குற்றப்படுத்தக் கூடாது. மாறாக நாம் வேஷந்தரித்தவர்களைப் புறக்கணித்து, நல்லவர்களாகயிருப்பவர்கள் மேல் முக்கியத்துவம் காட்டவேண்டும்.

அனைத்து சமயக்குழுக்களிலும் மோசமான ஜனங்கள், வேஷந்தரித்தவர்கள், திருடர்கள், பொய்யர், விபச்சாரக்காரர், மேலும் எல்லாவித அசுத்தங்களையும் நடப்பிக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சமய அமைப்புகள் நியாயந்தீர்க்கப்பட்டிராது மேலும் தண்டிக்கவும்பட்டிராது, ஏனென்றால் அந்த அமைப்பின் சில அங்கத்தினர்கள் தவறான செயல்களை செய்து கொண்டிருக்கலாம். மாறாக, இது தேவ வார்த்தையின் போதனை அடிப்படையிலோ அல்லது அந்த






## துவாலையின் பாடம் -4

Lessons of the Towel - *Jerry Bates*

**இயேசுவின் உயிர்த்தெழுதலும், ஒளியுமானவர் - யோவான் 11:1-53**
**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

**-சென்றமாத இதழின் தொடர்ச்சி**

**இ) யூதர்கள்:**

1. அவர்கள் அனைவரும் இயேசு லாசருவின் மீது வைத்திருந்த அன்பைக் காண முடிந்தது.

2. மற்றவர்களைப்போலவே அவர்களும் மரணத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்று நம்பினார்கள் (11:37).

3. அந்தப்படியே அனைவரும் முன்பு அவர் மரித்தோரை எழுப்பியதைப் பார்த்துள்ளனர். ஆனால் அவர் அப்படியே மறுபடியும் செய்வார் என்று நம்ப மனமில்லாதிருந்தார்கள்.

### III) அற்புதத்தின் நோக்கம்.

**அ) தேவனையும், கிறிஸ்து அவருடைய குமாரனே என்று மகிமைப்படுத்தவும் இதை மனிதர்கள் நம்பும்படியாக தூண்டவுமே (11:4).**

1. மகிமைப்படுத்துவது என்றால், பெரிதாகப் பேசவது உற்சாகமாய்ப் பேசுதல் மகிழ்வது மரணத்தை தவிர்ப்பதை விடவும் மரித்தோரை எழுப்புவது என்பது இன்று மிகப்பெரிய அடையாளமாகும்.

2. ஆச்சரியமான ஒரு வாக்கை 11:15-ல் இயேசு சொல்கிறார்

**ஆ) தாமே உயிர்த்தெழுதல் என்று இயேசு சொன்னதற்கு இந்த உயிர்த்தெழுதல் ஆதரவாக இருந்தது (11:25-26) அவருடைய தேவத்துவத்துவத்தின் நிருபனமாக அவருடைய சொந்த உயிர்த்தெழுதலே இருக்கும் (ரோமர்1:4) அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொண்டு தேவனுடைய குமாரனென்று நிரூபிக்கப்பட்டார்.**

**இ) தாமே ஜீவன் என்று இயேசு சொன்னதற்கு இந்த அற்புதம் ஆதரவாக இருந்தது எல்லா உயிருக்கும் அவரே ஆதாரமாக இருக்கிறார் (5:26).**பிதாவுக்கு தம்மில் தாமே ஜீவன் இருப்பது போல குமாரனுக்கும் அவரிலே ஜீவன் இருக்கும்படி அவர் தந்தருளினார்.

### IV) அற்புதத்தின் உண்மைத்தன்மை.

**அ) அங்கே ஏமாற்றுவதற்கு இடமில்லை.**

1. அந்த இடத்தில் இயேசு இல்லை ஆகையால் அங்கே எந்த சதித்திட்டமும் தீட்ட இடமில்லை.

2.லாசரு மரித்து நான்கு நாட்களாகின்றன. அங்கே நாற்றமடிக்கிறது. ஆகவே ஏமாற்றோ அல்லது உணர்ச்சி வசப்பட்ட மயக்க நிலையோ இல்லை.

3. விசுவாசிததவர்கள், விசுவாசியாதவர்கள் அனைவரும் நம்பினர் (11:35-47).

**ஆ) இந்த அற்புதம் ஒன்றும் மறைக்கப்பட்டதல்ல.**

1. இது பகற்பொழுதில் அனைவருக்கும் முன்பாக நிகழ்த்தப்பட்டது.

அடுத்ததாக, குணசாலியான ஸ்திரீ 'உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள்" (வச.13,14) என்று வாசிக்கிறோம். அனுதினமும் எங்கள் தெருவிற்கு அதிகாலமே ஒரு பெண் காய்கறிகள், கீரை என்று சத்தம் போட்டு கூவி அழைத்து விற்பனை செய்யவருவாள். அவளுடைய சப்தத்தைக்கேட்டு தூங்கிக் கொண்டிருக்கிற அனைவருமே விழித்துக்கொள்ளவேண்டும். இந்த ஸ்திரீ ஒரு அந்நிய ஸ்திரீ ஆனால் நீதிமொழிகளில் கூறப்பட்ட குணசாலியான ஸ்திரீயைப்போலவே வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள். அனால் அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் இப்படிப்பட்ட உற்சாகத்துடன் காணப்படுவதில்லை. மேலும் இன்னும் சிலருக்கு 'Prestige Issue'. நாம் போய் ஒரு கீழான வேலை செய்வதா? என்று நினைத்து ஆடம்பர வாழ்வு வாழ்ந்து கடன்பட்டு இங்குமங்குமாக அலைந்து கொண்டிருப்பர். அன்பு சகோதரியே, இந்த குணசாலியான ஸ்திரீயைப் போல் வியாபாரக் கப்பல்களைப் போல் மாறுங்கள். உங்கள் புருஷனின் சம்பத்துக்குறையாதிருக்கும்.

மாத்திரமல்ல, குணசாலியான ஸ்திரீ திராட்சத் தோட்டத்தை நாட்டுகிறாள் தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள் அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும். சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து ஏழைகளுக்குத் தன்கரங்களை நீட்டுகிறாள் (வச.16-20). இவ்வசனங்களை வாசிக்கும் போது புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இடம்பெற்றுள்ள தபீத்தாள் என்பவள் நினைவிற்கு வருகிறது. "தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்" (அப்.9:36) என வாசிக்கிறோம். இவளுடைய நற்கிரியைகளைப் பற்றி அப்பட்டணத்திலிருந்த மற்ற ஸ்திரீகள் சாட்சிபகருகின்றனர் (அப்.9:39).

மேலும் நீதிமொழிகள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள குணசாலியான ஸ்திரீ மெல்லிய புடவைகளை விற்கிறாள் அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலத்தில் உட்கார்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான் என்றெல்லாம் வாசிக்கிறோம். ஒவ்வொரு குணசாலியான ஸ்திரீயினிமித்தம் அவளுடைய புருஷனுக்குப் பேரும் புகழும் ஏற்படவேண்டும். அப்போது அவளுடைய புருஷனுக்கு அவள் கிரீடமாயிருப்பாள். ஆபிரகாமின் மனைவி "அந்தப்படியே ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்" (1பேது.3;6). நாமும் இவர்களைப் போலிருப்போமா?

கடைசியாக: குணசாலியான ஸ்திரீ, "...வருங்காலத்தைப்பற்றியும் மகிழ்கிறாள்" (நீதி.31:25). ஏனென்றால், மேற்குறிப்பிட்டுள்ள காரியங்களைச் செய்யும் போது நாம் சோம்பலின் அப்பத்தைப் புசிக்கமாட்டோம், நம்பிள்ளைகள் எழும்பி நம்மை பாக்கியவதி என்பர் நம் புருஷன் நம்மைப் பார்த்து 'அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று புகழுவார் (வச.27-29) குணசாலியான ஸ்திரீ இவ்விதமாகக் காணப்படும் போது அவள் கர்த்தருக்குக்குப் பயப்படுகிற ஸ்திரீயாகவும் புகழப்படுவாள் (வச.30). கர்த்தர் தாமே சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்து வருங்காலத்தைக் குறித்து மகிழப்பண்ணுவாராக! ஆமென்.



புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள நேர்மையின் நிலையோடு அங்கத்தினர்களின் வாழ்வின் மேன்மைக்காக உருவாக்கப்பட்டுள்ள உண்மையான பிரயாசத்தின் அடிப்படையிலோ தீர்க்கப்பட வேண்டும். அங்கே பவுலின் காலத்தில் சத்தியத்தை விட்டு விலகி உலகத்திற்குத் திரும்பினவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவன் தேமா, இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, பிரிந்து போய்விட்டான் எனக் கூறினான் ( 2தீமோ.4:10 ). மேலும் பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்கு, பிரிவினை போன்ற எண்ணற்ற மோசமான பிரச்சனைகளான சகோதரனுக்கு விரோதமான நடக்கையில் ஈடுபடுதல், விபச்சாரத்தைக் குறித்த குற்ற உணர்வுடனிருத்தல், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை புசித்தல், கர்த்தருடைய பந்தியை சாதாரணமான போஜனத்திற்கு ஒப்பாக எண்ணுதல், இன்னும் இதுபோன்ற பல பிரச்சனைகளைப் பட்டியலிட்டு எழுதினான். ஆயினும், அவன் அங்குள்ள சகோதரரை தேவனுடைய சபையாக அழைத்தான் ( 1கொ. 1:1,2 ). அவர்களுக்கு அவன் எழுதிய இரண்டாவது நிருபத்தில், ஆவிக்குரிய முதிர்ச்சிக்கான வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட அவர்களுடைய பிரயாசத்தில் சில முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததை நம்மால் காணமுடிகிறது.

கிறிஸ்து யூதாஸின் துரோகத்தினிமித்தம் அப்போஸ்தலர்களை கைவிட்டு விடவில்லை,மேலும் யூதாஸ் செய்த காரியத்திற்காக அப்போஸ்தலரும் கலைந்துசென்று விடவில்லை. உண்மையான நிகழ்ச்சியாக, அவர்கள் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள் முதற்கொண்டு, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் நாள் வரைக்கும், அவர்களுடனே கூட இருந்த மனுஷர்களில் ஒருவனை யூதாஸ் இழந்து போன இடத்தில் பங்குபெறுவதற்காக தெரிந்தெடுக்கும்படிக்கு தொடர்ந்து முயன்றார்கள் (அப்.1:21-26).

சகோதரரில் சிலர் தன்னை விட்டு விட்டபடியினாலோ அல்லது கொரிந்து பட்டணத்திலுள்ள சபையில் காணப்பட்ட எல்லா பாவங்களினிமித்தமாகவோ பவுல் சபையை விட்டு விலகவில்லை. அவன் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் தவறான வழியில் சென்ற தன்னுடைய சகோதரரை சீர்திருத்தம் செய்யும் முயற்சியிலும் விசுவாசமுள்ளவனாய் நிலைத்திருந்தான் . அவன், கிறிஸ்து எவ்வாறு சபைக்காக மரித்து, அதைத் தம்முடைய இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொண்டு, சபையின் இரட்சகராகவும், அதன் தலைவராகவும், மேலும் அவர் தமக்கென்று சபையை ஏற்றுக்கொள்ளும்படிக்கு திரும்பவும் வருவார் என்ற சபையைக்குறித்த அற்புதமான காரியங்களை சொல்லவும் உறுதிகொண்டிருந்தான் ( எபே.5:25; அப்.20:28; எபே.5:23; கொலோ.1:18 1கொ.15:24 ). குறைபாடுள்ள கர்த்தருடைய சபைக்குக் கற்றுக்கொடுத்தான் என்ற இந்தக் கூற்றுகளிலிருந்து, தேவனுடைய கிருபையானது, அவர்களுடைய வாழ்வில் கிறிஸ்தவர்களாக வளருவதற்கு மனிதாபிமான வாய்ப்புகளை அனுமதிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது.நாம் கர்த்தருடைய வழி, அவருடைய சபை, அவருடைய ஜனங்கள் மற்றும் சபையின் நாமத்தினை விட்டு விலகக்கூடாது. நாம், அவர்களுடைய பக்தியற்ற வாழ்வில் சில அங்கத்தினர்களின் துரோகத்தினிமித்தம் சபைதனைக் குறித்து

வெட்கப்படுகிறவர்களாயிருக்கக் கூடாது. நாம் அந்த நபர்களைக் குறித்து வெட்கப்படு கிறவர்களாயிருந்து அவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டி, அவர்கள் மனந்திரும்பி மீண்டும் கர்த்தரிடமாய்ச் சேருவதற்கு ஊக்குவித்து நலமானதைச் செய்யவேண்டும். ஆனால் நாம் கர்த்தரிடத்தில் தாமே விசுவாசமுள்ளவர்களாகவும் அவர் நமக்குச் செய்தவற்றிற்காக நம்மால் முடிந்தவற்றை மென்மேலும் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். ஜீவனோடிருக்கப் போதுமானவற்றை சபைக்கும், அதன் விசுவாசமுள்ள அங்கத்தினராயிருக்க நமக்கும், கர்த்தர் செய்தவற்றிற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்கள் செய்த சிலவற்றிக்காக சபையை விட்டு விலகுவது காரியத்திற்கு உதவாது. நாம் நம்முடைய சொந்த சபையை துவங்கவோ, அல்லது கிறிஸ்துவின் நாமம் தரித்த கபடர்களினிமித்தம் 'கிறிஸ்துவின் சபை' என்ற பதத்துடன் ஒட்டிக்கொண்டிருந்த வெளிப்படையான கறையிலிருந்து விடுவித்துக்கொள்ளும்படிக்கு கர்த்தருடைய சபைக்கு வேறொரு நாமத்தை தெரிந்து கொள்ளவோ கூடாது. நாம் குறிப்பிட்ட சில மாம்ச சுபாவத்துடனிருப்பதால், ஒவ்வொரு குழுவிலும் கபடுசெய்கிறவர்களும், பாவிகளும் இருப்பார்களென நாம் உணர்ந்து கெள்ளவேண்டும். நீங்கள் "துரோகி" யிடமிருந்து விடுவித்துக்கொள்ள கர்த்தருடைய சபையை நிராகரித்தால், நீங்கள் "உங்களுடைய" சபையில் அல்லது வேறுயாரோ ஒருவருடைய சபையில் இதே பிரச்சனைகளையே சந்திப்பீர்கள். -- நீங்கள் தானே கர்த்தருடைய சபையின் ஒரு அங்கத்தினராக ஒருபோதும் கருதப்படமாட்டீர்கள் என்ற வித்தியாசமட்டுமே இருக்கும். ஆகவே நீங்கள் பிரச்சனையின் தீர்வாகயிருப்பதற்குப்பதிலாக பிரச்சனையின் ஒரு பகுதியாக மாறியிருப்பீர்கள்.

நாம் இந்த பூமியின் மேல் சபையில் வேஷந்தரித்தவர்களோடு வாழ வேண்டியவர்களாயிருப்போம் அல்லது அழிவில் வாதையில் வாழ வேண்டியவர்களாயிருப்போம் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். கர்த்தர், அவருக்குக் கீழ்ப்படிந்து மரணபரியந்தம், மற்றவர்கள் செய்கின்றதை கருத்தில் கொள்ளாமல் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும் நமக்கும் உதவிசெய்வாராக! எல்லாரும் துரோகிகள் அல்ல என்பதை சற்றே நினைவுகூருங்கள்.

**ஜெபியுங்கள்**

- இவ்வருட ஊழியங்களுக்காக...
- அநேக ஆத்துமாக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய...
- அநேக கர்த்தருடைய சபைகள் தேசத்தில் எழும்ப...
- சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்கப்பட...
- புதிய ஊழியர்கள் எழும்ப...
- நாட்டின் தலைவர்களுக்காக...
- மற்ற நாடுகளோடு உள்ள உறவு நீடிக்க...
- ஜனங்களை நேசிக்கிற அரசு நீடிக்க...





பெண்கள் பகுதி

# அவள் வருங்காலத்தைப் பற்றியும் மகிழ்கிறாள்

## She Shall Rejoice In Time To Come

*- Glory Arjunan*



யார் இவள்? வருங்காலத்தைப் பற்றி மகிழ்கிற ஸ்திரீ எப்படிப்பட்டவள்? ஏன் நீதிமொழிகள் 31-ம் அதிகாரம் வசனம் 10 முதல் 31 வரை இவளைப் பற்றி இவ்விதமாய் வர்ணிக்கிறது?

இவள் ஒரு "குணசாலியான ஸ்திரீ" அப்படித்தான் இவளிடம் என்னென்ன விசேஷித்த குணங்கள் உண்டு என்று பார்ப்போமே. இவளுடைய குணங்கள் நிச்சயமாக நம்மையும் இந்த புத்தாண்டில் மகிழ்ந்திருக்கப்பண்ணும் என்பதில் சந்தேகமில்லை.

ஆம், இந்த குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (வசன.10). எஸ்தர் என்ற ஸ்திரீயைப் பற்றி நாம் எஸ்தர் புத்தகத்தில் வாசிக்கலாம். எஸ்தர் ஒரு யூத ஸ்திரீ. இவளுக்குத் தாய்தகப்பன் இல்லை. மொர்தெகாய் என்பவனின் சிறிய தகப்பன் குமாரத்தி தான் இந்த எஸ்தர் என்பவள். இவளை மொர்தெகாய் எஸ்தரின் பெற்றோர் மரணமடைந்தவுடன் தன் குமாரத்தியாக எடுத்து வளர்த்து வந்தான் (எஸ்.2:7). இந்த எஸ்தர் தாயும் தகப்பனையும் இழந்த போதிலும் குணசாலியான ஸ்திரீயாகத் திகழ்ந்தாள். எனவே தான் இவள் மூலமாக யூத குலத்திற்கே இளைப்பாறுதல், சந்தோஷம், மகிழ்ச்சி கிடைத்தன (எஸ்.9:21). இவள் இந்துதேசமுதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாட்டிற்கும் ராஜாத்தியாக மாறினாள். இவள் குணசாலியாக இருந்ததினால் ராஜாவாகிய அகாஸ்வேருவை சந்திக்கப் புறப்படுமுன் தன் தாதிமார்களோடு மூன்றுநாள் தேவசமூகத்தில் ஜெபம்பண்ணி அதன்பின் ராஜாவை ஏற்ற சமயத்தில் சந்தித்து தன் விண்ணப்பத்திற்குப் பதிலைப் பெற்றுக்கொண்டாள் (எஸ்.4:16). ராஜாவின் கண்களில் தயவையும் பெற்றுக்கொண்ட ஸ்திரீ இவள். நீதி.31:1-ல் "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் எனக்காண்கிறோம். இதைப்போலவே எஸ்தரின் புருஷனாகிய அகாஸ்வேருவின் இருதயம் அவளை நம்பினது. இவள் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்ததல்லவா?

மேலும் ஒரு குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குத் தீமையையல்ல நன்மையையே செய்கிறாள் என வாசிக்கிறோம் (நீதி.10;12). ஒரு உண்மைக் கிறிஸ்தவளாக இருக்கும் ஸ்திரீயும் தன் புருஷனுக்கு நன்மையையே செய்யவேண்டும். எவ்விதத்திலும் தன் புருஷன் மட்டுமே கஷ்டப்பட்டு வேலை செய்து வரவேண்டும். நாம் வீட்டில் சும்மா இருந்துகொண்டு பொழுதைக் கழிக்கலாம் என்றிருக்கக்கூடாது. அநேக ஸ்திரீகள் அவ்வாறு தான் இருக்கிறார்கள். இப்படியிருப்போமானால் நம் கணவருடைய சம்பத்துக் குறையத் தான் செய்யும். ஆனால் ஒரு குணசாலியான ஸ்திரீ நிச்சயம் வீட்டிலிருந்துகொண்டே எவ்விதத்திலெல்லாம் தன் புருஷனுக்கு நன்மை செய்யலாம் என்று சிந்திப்பாள்.

பெற எத்தனை இலட்சம் ஆண்டுகள் எடுத்திருக்கும், மேலும் இந்த மென்மையான பூக்கள் உண்மையான பூக்களைப்போல அச்சுபதித்து இந்த சித்திரம் தீட்ட எத்தனை அதிகமான பல கோடி ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும் என நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றும் மேலும் இது எங்கிருந்து, எங்கே உருவாகி, இந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு எவ்வாறு இரண்டு பகுதிகளாக உடைக்கப்பட்டுள்ளது? என நான் அதிசயிக்கிறேன்" என்றும் நினைப்பீர்களா?

இல்லை; இப்படிப்பட்ட நினைவுகள் ஒருபோதும் ஒருவருடைய நினைவிலும் உண்டாகாது. அது தட்டையானதும் வட்டமானது - உடைந்த தட்டாக இருந்தபோதிலும், சித்திரந்தீட்டப்பட்டதாகவும் - அதை உருவாக்குவதற்கு மனிதனுடைய மதிநுட்பம் தேவைப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் ஏதோ திறமையுடைய ஓவியர் - மீண்டும், புத்திநுட்பம், சித்திரந்தீட்டும் அறிவுத் திறமையோடுள்ள ஒரு மனிதன் - அழகிய வடிவமைப்பிற்கும் மென்மையான வண்ணங்களுக்கும் பொறுப்பாளியாக இருந்திருக்கிறான் என்பதையும் அறிவீர்கள். மேலும் யாரோ ஒரு மனிதன் உடைந்துபோன துண்டுகளை உங்கள் வழியில் போட்டிருக்கிறான் என்பதையும் அறிவீர்கள்.

மனிதன் தட்டினை உருவாக்குகின்றதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்ததை நிச்சயமாக நீங்கள் பார்க்கவில்லை உங்களால் பார்க்க முடியவில்லை என்பதும் அதை உருவாக்க மனிதனுடைய மதிநுட்பம் தேவைப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையல்லவா? அந்த தட்டு பத்து ஆயிரம் மில்லியன் ஆண்டுகளிலும் கூட தானாகவே உருவாகியிருக்கவில்லை என்பதை நீங்கள் முழுமையாக நிச்சயிக்கவில்லையா?

இப்போது, நீங்கள் வண்ணம் தீட்டப்பட்ட உடைந்த தட்டிற்குப் பதிலாக உண்மையான பூக்களை - உயிருள்ள பொருட்களை - உங்கள் காலுக்கடியில் அற்புதமான மிகுந்த வண்ணத்திலும் வாழ்வினையும் கொண்டு வளருகின்றவற்றை பார்க்கலாம். நீங்கள் குனிந்து அதற்கருகில், சிக்கலான விபரத்தினையும், அதன் பாகங்களின் ஒரே சீரான சித்திர அமைப்பினையும் பார்க்கச் சென்று; நீங்கள் இதழ்களின் வழுவழுப்பான தன்மையையும், எப்படியோ அதன் மிருதுவான வெல்வெட்டை தொடும்போது ஏற்படும் மென்மைத்தன்மை; மென்மையான காற்றுவீசுவதனால் ஏற்படும் பூக்களின் இனிய வாசனையை உங்களுடைய மூக்கு நுகர்வதையும் உணர்வீர்கள். பளப்பளப்பான தாவரங்களின் இலைகள், தண்டுகளைக் கண்டு நீங்கள் வியந்து, மேலும் ஊதா வர்ணம், மஞ்சள், நீல நிறம், வெண்மை, ஆரஞ்சு நிறம் அல்லது சிவப்பு நிறம் - இப்படிப்பட்ட வித்தியாசமிக்க இழைகள் நிறங்கள் எல்லாம் ஒரே தாவரத்தில் இருப்பதைக் கண்டு வியப்பீர்கள்!

-தொடரும்...

**கர்த்தருடைய ஊழியர்களோடு இணைந்து ஊழியப் பயிற்சி பெற**
**தொடர்பு கொள்ளவும்: 94435 58041**

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் - இயேசு (யோவான் 12:26)



# வைராக்கியம்

## Zealous

A.Kanakaraj
Associate Editor



நாம் வாழும் பூமியிலே எல்லோரும் ஏதாவது ஒரு விஷயத்திற்காக வைராக்கியம் கொண்டு இருப்போம். ஒரு மாணவன் நன்கு படித்து அதிக மதிப்பெண் எடுத்து IAS ஆகவேண்டுமென நினைத்தால் போதாது, அதற்காக உழைத்துப் படிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு இருந்தால் இலக்கை அடைய முடியும். அதைப்போலவே பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள் ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறிவீர்களா? நீங்களும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள் (1கொரி.9;24,25). ஓட்ட பந்தய வீரன் வெற்றி இலக்கை அடைய சிற்றின்பங்களையும், மதுவையும் வெறுத்து தான் எடுத்துக் கொண்ட காரியத்தில் வைராக்கியமாய் இருந்தால் மட்டுமே வெற்றி பரிசை பெற முடியும்.

தேவனுக்கு அடுத்த காரியத்தில் நற்கிரியைகளைச் செய்ய அறியாமையுள்ள காலத்தில் தேவனைப்பற்றி அறியாது இருந்தோம். இப்பொழுது அறிந்துகொள்ளும் காலத்தில் இருக்கிறோம். தடவியாகிலும் கண்டுகொள்ளவேண்டும். தேவ சித்தத்தைத் தேடி ஆராய்ந்து, பகுத்து படித்தால் எது மெய் எது பொய் என்பதை அறிந்து நலமானதில் வைராக்கியமாக இருந்தால் மறுமையில் நித்திய ஜீவன் உண்டு. அது அறிவுக்கேற்ற வைராக்கியமாக இருக்கவேண்டும். நல்ல விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான். அதே நேரத்தில் நல்மனதோடு அப்படிச் செய்தால் மிகவும் நல்லது. வானத்தையும் பூமியையும் சகலத்தையும் உண்டாக்கின சர்வ வல்லமையுடைய தேவனை ஆராதிக்கிற விஷயத்தில் வைராக்கியமுள்ளவர்களாக இருங்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதையால் 24,000 பேர் செத்தார்கள். இந்த வாதையைப்போக்க ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் பக்தி வைராக்கியம் கொண்டு வேசித்தனம் பண்ணும் அந்த மனிதனின் அறையிலே அவன் பின்னாலே போய் இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களை குத்திப்போட்டான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று (எண்.2:11,12).

மோசே பெரியவனான காலத்தில் அவன் தன் சகோதரரிடத்தில் போய் அவர்கள் சுமை சுமக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதை கண்டு அங்கும் இங்கும் பார்த்து ஒருவரும் இல்லை என்று அறிந்து எகிப்தியனை வெட்டி அவனை மணலிலே புதைத்துப்போட்டான்

(யாத்.2:11,12). இந்த நிகழ்வு மோசேயின் நல்மனசாட்சி செய்த வைராக்கியம்.

நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், கர்த்தருடைய வாக்குக்கு விரோமாய் கலகம் பண்ணினீர்களானால் கர்த்தருடைய கை உங்கள் பிதாக்களுக்கு விரோதமாயிருந்ததுபோல உங்களுக்கும் விரோதமாயிருக்கும்... சாமுவேல் கர்த்தர் மீது வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை. சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அன்றைய தினமே கர்த்தர் இடிமுழக்கங்களையும், மழையையும் கட்டளையிட்டார்; (1சாமு.12:15-28). கர்த்தரை விட்டு பின்வாங்காமல் கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும் சேவியுங்கள், விலகிப்போகாதிருங்கள் என்று இன்னும் அநேக யோசனைகளைக் கூறினான். சாமுவேல் கர்த்தரிடம் ஜெபித்ததினால் கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனங்களை கைவிடாதிருந்தார்.

யோசுவா என்பவன் வைராக்கியம் கொண்டு மோசேயை நோக்கி; என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும் என்றான். அதற்கு மோசே: நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான் (எண்.11:28,29).

பவுல்; நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடவடிக்கை குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி அதை பாழாக்கி என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய் என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியம் உள்ளவனாயிருந்தேன் என்கிறார் (கால.1;13,14). மேலும் நான் யூதன் சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றைய தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கிய முள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாய் இருந்தேன். இப்படியிருந்த அப்போஸ்தலனாகிய பவுல் தொடர்ந்து அந்த வீணான பாரம்பரியத்தில் வைராக்கியம் வைக்காமல் புதிய ஏற்பாட்டு உபதேச சட்டத்திற்கு தாமதமில்லாமல் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று, பாவங்கள் போக கழுவப்பட்டு உடனே ஊழியத்தை துவக்கினார். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று எண்ணினதாக சொல்லுகிறார். ஆகையால் அந்த யூத மார்க்கத்தை விட்டு ஜீவனுள்ள மார்க்கத்திற்கு வந்தார்.

இன்றைக்குங்கூட அநேகர் நான் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்தவன், சி எஸ் ஐ சபையைச் சார்ந்தவன், லூத்தரன் சபையைச் சார்ந்தவன் என்று சொல்லிக்கொண்டு பாரம்பரியத்தில் மூழ்கி இருக்கிறார்கள். இவையெல்லாம் மனித கற்பனையின்படி உண்டான மார்க்கமாகும். தேவன் ஏற்படுத்திய மார்க்கத்திற்கு வைராக்கியம் கொண்டு திரும்புங்கள்.



பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

## Can Man Find the Way to God? *-Betty*

### பாடம் -1
### தேவன் ஒருவர் இருக்கிறாரா?
### Is There a God?




நாம் தேவனைக் காணமுடியாது

We can`t see God

- சென்ற இதழின் தொடர்ச்சி

சிலர், தேவனில் விசுவாசம் இல்லாதவர்களாக, இன்னும் தங்கள் சொந்த கண்களால் காண்கிறவற்றையே நம்பும் உணர்வுள்ளவர்களாக, உண்மையாக, "நான் தேவனைக் கண்டதில்லை" அதன்பிறகு, அவர் உண்மையாகவே இருக்கின்றாரா, அதை நான் எப்படி அறியமுடியும்? என அவர்கள் கேட்கின்றனர்.

ஆனால் சற்று நின்று நிதானித்துப்பாருங்கள். உங்கள் சொந்த கண்களால் காற்றைக் காண முடியுமா? எப்போதாவது நீங்கள் புவிஈர்ப்பு விசையை பார்த்திருக்கிறீர்களா? நம்முடைய சரீரக் கண்களால் சாதரணமாக காணமுடியாத பலவற்றில் இவை இரண்டு மட்டுமே, ஏனென்றால் அவைகளெல்லாம் நமக்கு கண்ணுக்குப்புலப்படாத பொருட்களில் ஒரு ‘பொருள்’ இருந்தபோதிலும், அவைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் இருக்கின்றன என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஏன்? ஏனென்றால நாம் எதைச் செய்கிறோமோ அதையே நாம் காணமுடியும். அதே மாதிரி, தேவன் இருக்கிறார் என்பதை நாம் அறியமுடியும் ஏனென்றால் அண்டசராசரங்களிலுள்ள எல்லா சரீரப்பிரகாரமான பொருட்களையும் அவருடைய படைப்பின் வல்லமையின்மூலம் இருக்கின்றன என நாம் காண முடியும்.

ஆனால் சவால் எழும்புகிறது: "அறிவியல் அறிஞர்கள் உருவான பொருட்கள் பரிணாம வளர்ச்சியினால் உருவானவை - அவைகள் சிருஷ்டிகரைக் கொண்டிருக்கவில்லை. எனவே இருக்கின்ற சரீர பிரகாரமான அண்டசராசரங்கள் தேவன் இருக்கிறார் என எவ்வாறு நிரூபிக்க முடியும்? என்கின்றனர்.

**நுண்ணறிவுள்ள திட்டத்திற்கு சாட்சியம் உண்டு**

ஒருவேளை நீங்கள் ஒரு பாதையின் வழியே சென்று கொண்டிருக்கலாம், உங்களுடைய கண் புறக்களுக்குள்ளே பாதி மறைந்துள்ள ஏதோ ஒன்றை சுட்டிக்காட்டுகிறது. நீங்கள் அதை எடுக்க குனிகிறீர்கள் அதன்பின் அது ஒரு உடைந்துபோன அழகிய பூக்களின் சித்திரம் தீட்டப்பட்ட பீங்கான் தட்டு என்பதை அறிகிறீர்கள். களிமண்ணால் கொஞ்சங்கொஞ்சமாக இவ்விதமான வடிவத்தைப்